# EASTERN UNIVERSITY, SRI LANKA
# FACULTY OF COMMERCE AND MANAGEMENT
## (EXTERNAL DEGREE)
## PART – II EXAMINATION IN BACHELOR OF ECONOMICS – 2009/2010
## (JULY, 2013)

23 AUG 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

## EXE 3093 PUBLIC SECTOR ECONOMICS

எல்லா வினாக்களுக்கும் விடை தருக. நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01.(அ) அரசாங்கத்தின் சமூகநலத் தொழிற்பாட்டிற்கும் PARETO வின் உத்தம மட்ட வினைத்திறன்மிக்க வெளியீட்டு விளக்கத்திற்கும் இடையிலான தொடர்பு யாது?
(08 புள்ளிகள்)

(ஆ) PARETO வின் உத்தமமட்ட பயன்பாடு பொருளாதார ரீதியில் வினைத்திறன் மிக்கதாகக் காணப்படுவதற்குப் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிபந்தனைகளை விளக்குக.
(12 புள்ளிகள்)

02.(அ) “இலவசப் பயணி” (FREE-RIDER) பிரச்சினை எனபதனால் நீர் விளங்கிக்கொள்வது என்ன?
(08 புள்ளிகள்)

(ஆ) இலங்கை போன்ற வளர்முக நாடொன்றில் மேற்படிப் பிரச்சினைக்கு எத்தகைய தீர்வுகள் சாத்தியமாகுமென நீர் கருதுகின்றீர்? விளக்குக
(12 புள்ளிகள்)

03. (அ) பொதுப் பொருள் (PUBLIC GOOD) என்றால் என்ன?
(08 புள்ளிகள்)

(ஆ) பொதுப் பொருள் ஒன்று நுகர்வில் போட்டியற்ற தன்மை உடையதாகையால், விலக்குதல் விதிக்குட்படமாட்டாதா? பரிசீலிக்குக.
(12 புள்ளிகள்)

04. (அ) நேர்க்கணிய வெளிவாரி விளைவுகள் இடம்பெறும் உற்பத்திச் செயற்பாடுகளில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் எவ்வாறு அமைகின்றன? விளக்குக.
(08 புள்ளிகள்)

(ஆ) எதிர்மறை வெளிவாரி விளைவுகளினால் தோன்றும் வினைத்திறனின்மையை ஒழிப்பதற்கு வரியின் பங்களிப்பு யாது? வரைபடத்தைப் பயன்படுத்தி விளக்குக.
(12 புள்ளிகள்)

05.(அ) சமூகத்தெரிவு விதி தொடர்பான KENNETH ARROW வின் கருத்துக்களைத் தருக.
(08 புள்ளிகள்)

(ஆ) சமூகத்தெரிவு விதி பொதுப் பொருள் உற்பத்தியில் செல்வாக்கு செலுத்தும் ஆற்றலைப் பரிசீலிக்குக.
(12 புள்ளிகள்)